# கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
# Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

*ஆடிமாத இதழ்*
*NEWS BULLETIN*
*JULY 2020*
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்


| நாள் | நிகழ்வு |
|---|---|
| 01/05/2020 முதல் | கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தினால், நடாத்தப்பட்டு வருகின்ற தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் அனைத்துக் கற்பித்தல் செயற்பாடுகளும், உலகெங்கும் வேகமாகப் பரவி வரும் "கொரோணா" தொற்றிலிருந்து எல்லோரையும் பாதுகாக்கும் பொருட்டு, மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போதும், எல்லா வகுப்புகளுக்குமான தமிழ்ப்பாட செய்முறைகள், நவீன தொழில்நுட்பமுறை மூலம் ஆசிரியர்களும் மாணவர்களும் தத்தமது வீட்டிலிருந்தவாறே அனுப்பப்பட்டும், கற்பிக்கப்பட்டும் வருகின்றன. |

## ஆடி மாதத்தின் சில சிறப்புகள்

ஆடிப்பிறப்பு என்பது தமிழ் சமூகத்தில் மிகவும் முக்கியமானதொரு பண்டிகையாகும். அன்றைய நாளின் அடையாளமாக ஆடிக்கூழும் கொழுக்கட்டையும் தான் சிறப்பு உணவுகளாகத் திகழ்கின்றன. ஈழத்துப் புலவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே" என்ற பாடல் அப்பொழுது நினைவுக்கு வரும்.

தமிழ்நாட்டில், ஆற்றங்கரைகளில் சித்திரான்னம் உண்ணுதல், படகோட்டம் எனக் கொண்டாடி மகிழ்வதோடு, இந்நிகழ்வை "ஆடிப்பெருக்கு" என்று அழைப்பர்.

ஆடி அமாவாசை தினத்தில் இறந்துபோன தந்தையர்களுக்காய் விரதமிருந்து, அவர்களை நினைவுகூர்ந்து, அவர்களுடைய ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்து அன்னதானம் போன்ற தான தர்மங்களைச் செய்வர்.

"ஆடி விதை தேடி விதை" "ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்" என்ற பழமொழிகளுக்கும் பெயர் போனது இந்த ஆடி மாதம்.

## மனம் விட்டுப் பேசுவோம்

போருக்குள் வாழ்ந்து, போரின் வடுக்களைச் சுமந்து, புலம்பெயர் தேசம் வரை வந்து, எத்தனையோ இடர்களை எடுத்துக் களைந்த எமக்கு, இதுவென்ன புதியவகை மன அழுத்தம்?

அண்டமெல்லாம் அதிரவைத்த பண்டைய தமிழன் பரம்பரை நாம் என்பதை ஏன் மறந்தோம்? எத்துயர் வரினும் துணிவோடு எதிர் கொள்ள வேண்டும். ஏழையாய் வாழ்ந்தாலும் கோழையாய் வாழ்வதா? சாவை அணைப்பதால் எல்லாம் சரியாகிவிடுமா?

தோழமைகளோடு மனம் விட்டுப் பேசுங்கள். தோள்கொடுக்க ஆயிரம் பேர் இருக்கிறார்கள். எங்கள் தமிழ் உறவுகளே நாம் இழந்தது எல்லாம் போதும். எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு இருக்கிறது.

எமக்கு இங்கே கிடைத்தது எல்லாம் வரமே. அவனிடம் இருப்பது உன்னிடம் இருக்காது. உன்னிடம் இருப்பது அவனிடம் இருக்காது. இதுவே நியதி. இதுவே வாழ்க்கை. வாழப்பிறந்தவர்கள் நாங்கள் என்ற உண்மையைப் புரிந்து கொள்வோம். உயிரின் பெறுமதியைத் தெரிந்துகொள்வோம். உங்களை நம்பி, குடும்பம், வயதான பெற்றோர்கள் இருக்கிறார்கள் என்பதை ஒரு கணம் யோசிப்போம். நல்ல வாழ்க்கையை நேசிப்போம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்க் கல்விக்கழக ஆசிரியர்கள், நடைபெற்றுக்கொண்டிருக்கும் கொரோனா முடக்கத்திலும் வீட்டிலிருந்தவாறே கற்பித்தல் செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டிருக்கும் அதேவேளை, கலைநிகழ்வுகள் படைப்புகள் என தமக்கென ஒரு முத்திரையைப் பதித்து வருகிறார்கள் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்.

அந்தவகையிலே, தமிழகத்தின் தமிழ்ப் பட்டறை நடாத்திய சிறுகதைப்போட்டியில், தமிழ்ப்பாட ஆசிரியை திருமதி கலையரசி துறைவன் முதலிடத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் வலையொளியினூடாக (YouTube)

இவர் சிறுகதைக் காணொளிகளையும் வெளியிட்டு வருகின்றார்.

இனிய நந்தவனம் ஜூலை மாதம் 2020 இதழில், புலம்பெயர் மண்ணில் தமிழ்க் கல்வியின் அவசியம் என்னும் தலைப்பில், தமிழ்ப் பாடசாலை அதிபர் திருமதி ரஜனி உதயசேகரன் அவர்களது பேட்டி இடம்பெற்றுள்ளது.

இவர்கள் இருவருக்கும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது பாராட்டுகளையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.




அனைவருக்கும் வணக்கம்.

கடந்த 05.07.2020 அன்று நடைபெற்ற "பிரிந்த சிறகு" சிறுகதைப் போட்டியின் முடிவுகள்.

#முதல்_இடம்
எழு. Subha Kalyan
எழு. Kalaiarasy Thuraivan



தமிழ்ப்பட்டறை நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்ற சிங்கப் பெண்ணே சிறுகதை.

## சிங்கப் பெண்ணே

********** (சிறுகதை)

அன்று காலை ஏழு மணிக்கே சூரியன் சுட்டெரிக்கத் தொடங்கி விட்டான். கமலி கொட்டாஞ்சேனையிலிருந்து வெள்ளவத்தை போகும் பேரூந்தில் ஏறினாள். கூட்டமோ நிறையவே இருந்தது. இருக்க ஏதாவது ஒரு இடம் கிடைத்தால் நல்லது என்று நினைத்துக் கொண்டாள்.

இனப்பிரச்சினை நடந்து கொண்டிருக்கும் உச்ச காலகட்டம் அது. சிங்கள மொழி சிறிதும் தெரியாத கமலி, கிளிநொச்சியில் ஒரு சிறிய கிராமத்தில் இருந்து நேர்முகத் தேர்வுக்காகக் கொழும்புக்கு வந்திருந்தாள்.

ஒரு பெண்ணிற்கு அருகில் இடம் காலியாக இருக்க, அப்பாடா என்று போய் அமர்ந்து கொண்டாள். அந்தப் பெண்ணோ தான் இறங்குமிடம் வர, அடுத்த தரிப்பிடத்திலேயே இறங்கிக் கொண்டாள். கமலி வெளியில் தனது பார்வையைச் செலுத்தத் தொடங்கினாள். எப்போதுமே யன்னலூடாக வெளிப்புறக் காட்சியை கண்டு களிப்பதில் கொள்ளைப் பிரியம் அவளுக்கு. அழகழகான கட்டடங்களும், வீதியோரப் பூமரங்களும் அவளைக் கவர்ந்தன.

அந்நேரம் அவளருகில் ஒரு ஆடவன் வந்தமர்ந்தான். ஆள் வாட்ட சாட்டமாகத்தான் இருந்தான். ஆனால் அவன் பார்க்கும் பார்வையோ கமலியை அப்படியே விழுங்கி விடுவது போல் இருந்தது. அவனது பார்வையைத் தவிர்க்க, மீண்டும் வெளியில் பார்க்கத் தொடங்கினாள். தனது கையை மெதுவாக எடுத்துக் கமலியின் தொடையைத் தடவத் தொடங்கினான் அவன்.

உடனடியாகவே கமலி சுதாரித்துக்கொண்டு, கையில் கொண்டு வந்திருந்த குடையால் சரமாரியாக அவனை அடித்தாள். மொத்தக் கூட்டமும் அவர்களைப் பார்த்தது. ஆனால் யாரும் அவளுக்காகப் பரிந்து கொண்டு வரவில்லை. அந்த இடத்தில் அவள் அதை எதிர்பார்க்க முடியாது என்பதும் அவளுக்குத் தெரியும். ஈனச் செயல் புரிந்த ஆடவனும் வெட்கத்தில் அடுத்த தரிப்பிடத்திலேயே இறங்கி விட்டான்.

கடைசியாக கமலி தனது தரிப்பிடம் வர, அவள் இறங்கிக் கம்பீரமாகப் போகும் அந்த அழகைக் காணும் போது சிங்கள தேசத்தில் ஓர் சிங்கப் பெண்ணாய் காட்சியளித்தாள்.

நன்றி
திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன்.
தமிழ்ப்பாட ஆசிரியை.


இளைய தலைமுறைக்குத் தமிழே பேச முடியாத சூழல் இருக்கும் போது, தமிழ்க் கலாசாரத்தை எப்படிப் பாதுகாக்கப் போகிறார்கள்? என்ற வினாவோடு, இங்கிலாந்து நாட்டில் தமிழ் மொழியையும், தமிழ்க் கலாசாரத்தையும் மீட்டெடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் ரஜனி உதயசேகரன். நாட்டியப் பள்ளி ஆசிரியர், சமயப்பணி, தமிழ்ப்பணி என இயங்கி வரும் இவரிடம், நந்தவனத்துக்காக சில கேள்விகளை முன்வைத்தோம்.

தமிழில் பேசவே முடியாத போது தமிழ்க் கலாசாரம் வளருமா?

உங்களைப் பற்றிய அறிமுகத்தைச் சொல்லுங்கள்.

நான் இலங்கையில் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்தேன். சிறு வயதில் இருந்தே ஆன்மீகத்திலும், சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளேன். இங்கிலாந்தில் கொவன்ற் தமிழர் நலன்புரிச்சங்கம் நடத்தும் தமிழ்ப் பாடசாலையில் 13வருடங்களாக ஆசிரியராகப் பணியாற்றி, இப்போது அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்.

இங்கிலாந்தில் நமது தமிழ் மொழி, தமிழ்க் கலாசாரப் பாதுகாப்புக்காக என்னென்ன செய்து வருகிறீர்கள்.

இங்கு பல தமிழ்க் கல்விக் கூடங்கள் தமிழ் மொழியைக் கற்பிக்கின்றன. அதில் நான் கொவன்ற் தமிழர் நலன் புரிசங்கத்துடன் சேர்ந்து, தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தொண்டு செய்கிறேன். ஒரு வேற்றுமொழி பிரதான மொழியாக இருக்கும் போது, தாய் மொழி கற்பித்தல் என்பது, பல சவால்களைக் கொண்டதாகவே இருக்கிறது. அப்படி இருந்தும் எமது பாடசாலை பாடநூல், பாடத்திட்டம், கற்பித்தல் முறைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி, கற்பித்துப் பல




மாணவர்கள் உயர்தரம் வரை பயின்று, வெளியேறிக்கொண்டிருக்கின்றார். இத்துடன் பல கலாச்சார நிகழ்வுகளையும் நடத்தி, கலாசாரத்தையும் பாதுகாத்து வருகின்றோம்.

பொருளாதாரத் தேடலே போராட்டமாக இருக்கும் போது, கலாசார முன்னெடுப்புகளுக்குத் தமிழர்களின் ஆதரவு எப்படி உள்ளது

பல்லினப் பண்பாட்டுக் கலாச்சாரச் சூழலில் வாழ்ந்தாலும், எமது கலாச்சார முன்னெடுப்புகளுக்குத் தமிழர்களின் ஆதரவு பெரும்பான்மையாகவே காணப்படுகிறது. எமது பாடசாலையில் நடைபெறும் விழாக்களிலும், அல்லது கோயிலில் நடைபெறும் விழாக்களிலும், வேறு தமிழ்க் கலாச்சார விழாக்களிலும் தமிழர்களின் ஆதரவு மிகையாகவே உள்ளது.

ஆன்மீகப் பணிகளிலும் தாங்கள் நிறைய ஈடுபட்டு வருகிறீர்கள். அது பற்றிச் சொல்லுங்கள்.

சிறு வயது முதல் ஆன்மீகத்தில் மிகவும் ஆர்வம். இலங்கையில் இந்து இளைஞர் மன்றத்துடன் சேர்ந்து, அறநெறிப் பாடசாலையில் ஆசிரியராகவும், இருநாடுக்காரர் மன்றத்தின் பண்ணிசை வகுப்புகளையும் பல சமய நிகழ்வுகளையும் நடத்தி உள்ளேன். இங்கு வந்தும் இரண்டு கோயில்களில் சமய வகுப்புகளை இலவசமாக நடத்தி வந்தேன். கோயில் திருவிழாக்களின் போது கூட்டுப் பிரார்த்தனை போன்றவற்றையும், சில கோயில்களில் தொண்டராய் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்.

வேறு என்னென்ன பணிகளில் எல்லாம் ஈடுபட்டு வருகிறீர்கள்?

இவைகளை விட மணப்பெண் அலங்காரம், கேக் அலங்காரம், திருமண விழாக்களில் பூமாலை, பூச்செண்டு போன்றவற்றையும், இங்கு உள்ள தமிழ் வானொலி ஒன்றில் செய்தி வாசிப்பாளராகவும் லொகமும் பணியாற்றிக் கொண்டிருந்தேன். தற்போது வயோதிபர்களுக்குச் சேவைகளையும், இலங்கையில் உள்ள மூன்று மாணவர்களுக்குக் கல்விக்குத் தேவையான உதவிகளையும், இரண்டு வறிய குடும்பங்களுக்கு என்னால் முடிந்த நிதி உதவிகளையும் செய்துவருகிறேன்.

புலம் பெயர்ந்த தேசத்தில் வாழும் இளைய தலைமுறைக்காக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்

இங்கிலாந்தில் வாழும் தமிழ் இளைய தலைமுறையில் சிலருக்கு தமிழ் பேசவே முடியாது. அப்படியான நிலையில் அவர்களால் எதிர்காலத்தில் எப்படித் தமிழ்க் கலாச்சாரத்தைப் பாதுகாக்க முடியும்?. ஆகவே இனி வரும்காலம் வரும் இளைய தலை முறை இப்படியான பிழைகளைச் செய்ய விடாமல், பெற்றோர்கள் அவர்களை ஊக்குவித்து, புலம்பெயர் மண்ணில் தமிழ் அழியா வண்ணம் பாதுகாக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

## ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா- சிறுகதை

**********

ஒரு சிற்றூரில் கண்ணன் என்று ஒரு சிறுவன் தனது தாய் தந்தையுடன் வாழ்ந்து வந்தான். கண்ணன் சிறுவயதிலிருந்தே படிப்பில் ஆர்வம் இல்லாமல் இருந்தான். பாடசாலைக்குச் செல்லாமல், ஊரெல்லாம் சுற்றித் திரிந்தான். சிறிது சிறிதாகத் திருடவும் ஆரம்பித்தான். தாய் தந்தை அவனைக் கண்டித்தும் அவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் தன் விருப்பம் போலவே தொடர்ந்தும் திருடுவதில் ஆர்வம் காட்டினான்.

காலம் மாறியது. அவன் வளர்ந்து பெரியவனானான். ஆனாலும் அவனது திருட்டுப் பழக்கம் மாறவேயில்லை. தொடர்ந்தும் கடைகளில், வங்கிகளில் என்று அவன் திருட்டு வேலைகள் செய்து கொண்டிருந்தான். அவன் தாய் தந்தையருக்கு அவமானமாக இருந்தது. சமூகத்தில் அவனைத் தீய பழக்கம் உள்ளவனாகப் பார்த்தார்கள். அவனைக் கண்டு ஊர்மக்கள் அஞ்சினர்.

ஒரு முறை அவன் ஒரு பெரிய திருட்டில் ஈடுபட்ட போது, காவல்துறையினரால் கைது செய்யப்பட்டான். நீண்ட ஆண்டுகள் அவன் சிறைக்குள் அடைக்கப்பட்டான்.

அவனது கடந்த காலம் பற்றி அறிந்து கொள்ள ஒரு பத்திரிகையாளர் வந்து உரையாடினார். சிறுவயதிலிருந்தே தான் திருட்டுத் தொழில் செய்து வருவதாகவும், தாய் தந்தை சொல்லியும் கேட்காமல் இதைத்தொடர்ந்து செய்ததால், இன்று சிறைவாசம் அனுபவிப்பதாகவும் கூறினான். அதற்கு அந்தப் பத்திரிகையாளர், எல்லா பழக்கங்களையும் சிறிய வயதிலேயே மாற்றிக் கொள்ளவேண்டும்.


அப்படி முடியாவிட்டால் பெரியவனாக வளர்ந்த பின்பு அதை மாற்றவே முடியாது என்றார். தமிழில் ஒரு பழமொழி உள்ளது. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" அதற்கு நீயே சிறந்த உதாரணம் என்று கூறினார்.

நன்றி
செல்வன் யதுநந்தன் ரவிகாந்தன்
ஆண்டு 9.





முகக்கவசத்தை மறக்காது அணிந்து கொள்வதன் மூலமும், கைகளை அடிக்கடி சோப்பிட்டுக் கழுவுவதன் மூலமும் கொரோனா வராமலும், பரவாமலும் தடுப்போம். மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு முகக்கவசம் அணிவதால், சுவாசித்தல் மற்றும் கழுத்தை நெரித்தல் போன்ற இடர்பாடுகளுக்கு உள்ளாகலாம் என்பதால் அவர்களுக்கு அணிய வேண்டியதில்லை.




செல்வி நர்மிதா சந்திரமோகன்
ஆண்டு 9

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தினால் விடுக்கப்பட்ட அன்பான வேண்டுகோளை ஏற்று, அமரர் தீபன் ஐயா அவர்களுடைய இறுதிக் கிரியைகளுக்கான நிதியினை மனமுவந்து அளித்த அனைத்து உறவுகளுக்கும், கொவன்றி தமிழர் நலன்புரிச்சங்கம் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

